இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 300 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 28 – வியாழக்கிழமை 11 ஜுன் 2026 – வெளியீர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 300 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 28 - Thursday 11 June 2026 - Dak 8 Pages ₹ 5.00


## அல்லி நகரத்தில் பிறந்து

# அழியாத படைப்புகளைக் கொடுத்த 'இயக்குநர் இமயம்'!



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.6.2026) காலை மறைந்த இயக்குனர் இமயம் பாரதிராஜா அவர்களின் உடல்மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அதுபோது கழகப்பொருளாளர் டி. ஆர்.பாலு, கவிப்பேரரசு வைரமுத்து, நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. மற்றும் திரையுலகப் பிரமுகர்கள் உடனிருந்தனர்.

## பாரதிராஜா மறைவு குறித்து

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜுன் 11 –**

**"அல்லிநகரத்தில் பிறந்து அழியாத படைப்புகளைக் கொடுத்த 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-

தமிழ்த் திரையுலகின் பாதையை மாற்றியமைத்து, புதுப்போக்கினை உருவாக்கிய 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா அவர்களின் மறைவு பெரும் வேதனையைத் தருகிறது. தமிழ்த் திரையுலகிற்குப் பேரிழப்பாகிவிட்ட அந்தப் பெருங்கலைஞனின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைமொழியில் தனிமொழி பேசித் தனிச் சகாப்தத்தையே உருவாக்கியவர் பாரதிராஜா. ஸ்டூடியோக்களுக்குள் அடைபட்டிருந்த கேமராக்கள் பாரதிராஜா அவர்களால் கிராமங்களுக்குள் நுழைந்தன. கிராமத்து மனிதர்களையும் அவர்களது வாழ்க்கையையும் திரைக்குக் கொண்டு வந்து, தமிழ்ச்சினிமாவை யதார்த்தத்திற்கு மிக அருகில் கொண்டு சென்றார்.

16 வயதினிலே, கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், அலைகள் ஓய்வதில்லை, டிக் டிக் டிக், முதல் மரியாதை, கடலோரக் கவிதைகள், வேதம் புதிது, கருத்தம்மா உள்ளிட்ட அவரது படைப்புகளைத் தமிழ்ச்சினிமாவின் வரலாற்றை எழுதும் எவர் ஒருவரும் தவிர்க்க முடியாது. தனது படைப்பாற்றலின் வழியாகப் பிற மொழிகளிலும் படங்களை இயக்கி, அங்கும் தன் முத்திரையைப் பதித்த அவரை இந்தியத் திரை வரலாறு என்றைக்கும் உச்சத்தில் வைத்து நினைவுகூரும்!



### தலைவர் கலைஞர் மீது மிகுந்த பாசம் கொண்டவர்!

தலைவர் கலைஞர் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தவர். தமிழ் மீதும் தமிழினத்தின் மீதும் பற்றுகொண்டு, தமிழ்நாட்டின் உரிமைகள் தொடர்பான போராட்டங்களில் திரையுலகை ஈடுபடுத்தியதில் பாரதிராஜா அவர்களுக்கு மிகப்பெரிய பங்களிப்பு உண்டு.

### நெஞ்சம் மேலும் பாரமடைகிறது!

'இயக்குநர் இமயம்' பாரதிராஜா 'இசைஞானி' இளையராஜா 'கவிப்பேரரசு' வைரமுத்து ஆகியோரது கூட்டணியில் உருவான பாடல்கள் ஒவ்வொரு நிமிடமும் தமிழ்நாட்டின் ஏதோ ஒரு மூலையில் ஒலித்துக்கொண்டும், ஆயிரக்கணக்கான மக்களை மகிழ்வித்துக் கொண்டும்தான் இருக்கின்றன.

அவரது உடல்நலன் குறித்து விசாரிக்கவும், அவரது மகன் மனோஜ் பாரதிராஜாவின் மறைவுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறவும் பாரதிராஜா அவர்களைச் சந்தித்து உரையாடிய தருணங்களைத் தற்போது நினைக்கையில் நெஞ்சம் மேலும் பாரமடைகிறது.

பாரதிராஜா அவர்களின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலகைச் சேர்ந்த கலைஞர்களுக்கும், பாரதிராஜாவின் மாணவர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்லிநகரத்தில் பிறந்து, அழியாத படைப்புகளைக் கொடுத்த 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா அவர்கள், சினிமா ரசிகர்களின் மனங்களில் தமிழ் மக்களின் மனங்களில் என்றும் வாழ்வார்!

### அரசு மரியாதையுடன் வழியனுப்பி வைக்க வேண்டும்!

பாரதிராஜா அவர்களுக்கு நேரில் அஞ்சலி செலுத்தியபோது, அவரை அரசு மரியாதையுடன் வழியனுப்பி வைக்க வேண்டும் என்று அவர் உடனிருந்தோர் கோரினர். இயக்குனர் இமயம் பாரதிராஜா அவர்களின் சாதனைகளைப் போற்றும் வகையிலும், அவரைச் சார்ந்தோரின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் ஆவன செய்ய வேண்டுமெனத் தமிழ்நாடு அரசினைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் இருந்த போது

# அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமாவை ஏற்பதா?

## ரத்து செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு!

*சென்னை, ஜுன் 11 -*

*த.வெ.க.வில் இணைந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமா கடிதங்களை ஏற்று பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*சட்டப்பேரவையில் கடந்த மே 13ம் தேதி நடைபெற்ற பெரும்பான்மை வாக்கெடுப்பின் போது, முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையில் 25 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அவர்களுக்கு எதிராக கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, சபாநாயகரிடம் மனு அளித்திருந்தார்.*

*இந்த சூழ்நிலையில், மதுராந்தகம் எம்.எல்.ஏ. மரகதம் குமாரவேல், பெருந்துறை எம்.எல்.ஏ. ஜெயக்குமார், தாராபுரம் எம்.எல்.ஏ. சத்தியபாமா ஆகியோர் தங்கள் எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்து விட்டு, த.வெ.க.வில் இணைந்தனர். அவர்களின் ராஜினாமா கடிதங்களை அன்றைய தினமே சபாநாயகர் ஏற்றுக் கொண்டார். இதுகுறித்த அறிவிப்பு அரசிதழிலும் வெளியிடப்பட்டது.*

*தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் இருந்த போது, அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமா கடிதங்களை ஏற்ற உத்தரவை ரத்து செய்யக் கோரி தேசிய மக்கள் சக்தி கட்சி தலைவர் எம்.எல். ரவி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் உள்ள போது, ராஜினாமா கடிதங்களை ஏற்றுக் கொண்டது, கட்சித் தாவல் தடை சட்டத்தையும், மக்கள் தீர்ப்பையும் நீர்த்துப் போகச் செய்யும் வகையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

*அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமாவை ஏற்று பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும், அவர்களை தகுதி நீக்கம் செய்யக் கோரிய மனுக்களை விசாரித்து, முடிவெடுக்க சபாநாயகருக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

## மேட்டூர் அணை உரிய நேரத்தில் திறப்பில்லை!

# டெல்டா மாவட்டத்தில் விவசாயிகள் தவிப்பு!

## பயிர்கள் கருகும் அபாயம்!

**தஞ்சாவூர், ஜுன் 11 -**

**பல்வேறு பகுதிகளில் முழுமையான மும்முனை மின்சார வினியோகம் இல்லாததால் தண்ணீர்இன்றி தஞ்சை மாவட்டத்தில் பயிர்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் 20க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கோடிக்கணக்கில் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.**

### மேட்டூர் அணை திறப்பு இல்லை!

மாவட்டம் முழுவதும் குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இதற்காக மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜுன் மாதம் 12ஆம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.

இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்க இயலாத நிலை உள்ளது. இதனால் இந்த ஆண்டு ஜுன் 12ந்தேதி தண்ணீர் திறப்பது குறித்து அரசும் இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை.

### மின்சாரம் இல்லை

இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் கோடை நெல்சாகுபடி எனப்படும் முன் பட்ட குறுவை சாகுபடி பம்புசெட் மோட்டார் மூலம் சாகுபடி செய்யப்பட்டு வரு கிறது. ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்து விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். தற்போது பயிர்கள் நன்றாக வளர்ந்து வரும் நிலையில் உள்ளது.

விவசாயிகள் ஆழ்துளை கிணறுகள் மற்றும் மின் மோட்டார்களை நம்பியே நெல் சாகுபடி செய்து வரும் நிலையில் கடந்த சில வாரங்களாக போதிய நேரம் மும் முனை மின்சாரம் வழங்கப்படாததால் மோட்டார்களை இயக்க முடியாமல் தண்ணீர் பாய்ச்சுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஒருசில இடங்களில் டீசல் என்ஜின் மோட்டார் மூலம் விவ சாயிகள் தண்ணீர் பாய்ச்சி வருகிறார்கள்.

### வெடித்த வயல்கள்

மும்முனை மின்சாரம் இல் லாததால் தஞ்சையை அடுத்த விழுதியூர், இரும்புத்தலை, மணக்குடி, முனியூர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் பாசனத்துக்கு தேவையான தண்ணீர் கிடைக்காமல் வயல்கள் வறண்டு பாளம், பாளமாக வெடித்துள்ளன.

பயிரிடுவதற்காக கடன் வாங்கி விதை, உரம் மற்றும் தொழிலாளர் செலவுகளை மேற்கொண்ட விவசாயிகள் தற்போது பெரும் நஷ்டத்தை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.